டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in
கல்யாண் ஜுவல்லர்ஸ்
agridoctor.in | 23.04.2026 வியாழக்கிழமை | பக்கங்கள் 24 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 253 - Madurai | Online Edition

# இந்தியாவின் கடல் உணவு ஏற்றுமதி ரூ.72,000 கோடியை கடந்தது

புது தில்லி, ஏப்.22

கடல் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (னிஊணசிம்பு) வெளியிட்டுள்ள தற்காலிகத் தரவுகளின்படி, 2025-26 நிதியாண்டில் இந்தியாவின் கடல் உணவு ஏற்றுமதி சாதனை அளவாக ரூ.72,325.82 கோடியை (8.28 பில்லியன் அமெரிக்க டாலர்) எட்டியுள்ளதுடன், அதன் அளவு 19.32 லட்சம் மெட்ரிக் டன்களாக உயர்ந்துள்ளது. மொத்த ஏற்றுமதி வருவாயில் மூன்றில் இரண்டு பங்கிற்கும் மேலாக, அதாவது ரூ.47,973.13 கோடி (5.51 பில்லியன் அமெரிக்க டாலர்) பங்களிப்புடன் உறைவிக்கப்பட்ட இறால் முக்கிய வளர்ச்சி காரணியாகத் திகழ்கிறது. இறால் ஏற்றுமதி அளவில் 4.6% மற்றும் மதிப்பில் 6.35% வளர்ச்சியடைந்து, இந்தியாவின் கடல் பொருட்கள் ஏற்றுமதியில் தனது ஆதிக்கத்தை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

அமெரிக்கா 2.32 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான இறக்குமதியுடன் தொடர்ந்து மிகப்பெரிய ஏற்றுமதி இடமாகத் திகழ்கிறது. இருப்பினும், பரஸ்பர வரி விதிப்புகளின் தாக்கத்தால் அமெரிக்காவிற்கான ஏற்றுமதி அளவில் 19.8% மற்றும் மதிப்பில் 14.5% சரிவைக் கண்டுள்ளது. இந்த சரிவை சீனா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் வலுவான வளர்ச்சி ஈடு செய்துள்ளது. இரண்டாவது பெரிய ஏற்றுமதி இடமான சீனாவிற்கான ஏற்றுமதி மதிப்பில் 22.7% மற்றும் அளவில் 20.1% அதிகரித்துள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஏற்றுமதி மதிப்பில் 37.9% மற்றும் அளவில் 35.2% என வலுவான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. தென்கிழக்கு ஆசியாவும் மதிப்பில் 36.1% மற்றும் அளவில் 28.2% என குறிப்பிடத்தக்க விரிவாக்கத்தைப் பதிவு செய்துள்ளது.

ஜப்பானுக்கான ஏற்றுமதி மதிப்பில் 6.55% வளர்ச்சியடைந்த நிலையில், மேற்காசியாவிற்கான ஏற்றுமதி நிதியாண்டின் இறுதியில் ஏற்பட்ட பதற்றங்களால் 0.55% சிறிய சரிவைக் கண்டுள்ளது. பல தனிப்பட்ட சந்தைகள் இரட்டை இலக்க வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன, இது பாரம்பரிய சந்தைகளில் நிலவும் வர்த்தகச் சவால்களுக்கு மத்தியில் சந்தைப் பல்வகைப் படுத்தலை நோக்கிய தெளிவான மாற்றத்தைக் காட்டுகிறது. தயாரிப்புகளைப் பொறுத்தவரை, உறைவிக்கப்பட்ட மீன், ஊசிக்கணவாய் (Squid), கணவாய் (Cuttlefish), உலர்த்தப்பட்ட மீன் வகைகள் (Dry Fish) மற்றும் உயிருள்ள கடல் வாழ் உயிரினங்களின் (Live Fish) ஏற்றுமதி நேர்மறையான வளர்ச்சியைப் பெற்றுள்ளன, அதேசமயம் குளிர்விக்கப்பட்ட மீன்கள் (Chilled Fish) சரிவைக் கண்டுள்ளன. சுரிமி (Surimi), மீன் உணவு மற்றும் மீன் எண்ணெய் ஆகியவற்றின் ஏற்றுமதி மேம்பட்ட செயல்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது.

தளவாடங்களைப் பொறுத்தவரை, விசாகப்பட்டினம், ஜே.என்.பி.டி (JNPT), கொச்சி, கொல்கத்தா மற்றும் சென்னை ஆகிய முதல் ஐந்து துறைமுகங்கள் மொத்த ஏற்றுமதி மதிப்பில் 64% பங்கைக் கொண்டுள்ளன. இது இந்தியாவின் கடல் உணவு ஏற்றுமதி விநியோகச் சங்கிலியில் அவற்றின் முக்கியத் துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.




agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# நாமகிரிப்பேட்டையில் ரூ.1.10 கோடிக்கு மஞ்சள் ஏலம்



நாமக்கல், ஏப்.22

நாமக்கல் மாவட்டம், நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரந்தோறும் செவ்வாய்க்கிழமை மஞ்சள் ஏலம் நடைபெற்று வருகிறது.

இந்த வாரம் நடைபெற்ற ஏலத்திற்கு நாமகிரிப் பேட்டை, முள்ளுக்குறிச்சி, மெட்டாலா, மங்களபுரம், புதுப்பட்டி, சீராப்பள்ளி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து விவசாயிகள் மஞ்சளை கொண்டு வந்து குவித்தனர்.

ஆத்தூர், சேலம், ஈரோடு மற்றும் நாமக்கல் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து மஞ்சளை வாங்க வியாபாரிகளும் வந்திருந்தனர். விரலி மஞ்சள் 988 மூட்டை, உருண்டை மஞ்சள் 319 மூட்டை, பனங்காளி 33 மூட்டை என மொத்தம் 1,340 மூட்டை மஞ்சள் விற்பனைக்கு வந்திருந்தது. விவசாயிகள் முன்னிலையில் அதிகாரிகள் ஏலத்தை நடத்தினர்.

இதில், விரலி ரகம் குவிண்டால் அதிகபட்சம் ரூ.15,933க்கும், குறைந்தபட்சம் ரூ.12,659க்கும், உருண்டை ரகம் அதிகபட்சம் ரூ.13,212க்கும், குறைந்தபட்சம் ரூ.11,042க்கும், பனங்காளி அதிகபட்சம் ரூ.35,469க்கும், குறைந்தபட்சம் ரூ.3,789க்கும் விற்பனையானது.

மொத்தமாக விவசாயிகள் கொண்டு வந்த 1,340 மூட்டை மஞ்சள் ரூ.1.10 கோடிக்கு விற்பனையானதாக கூட்டுறவு சங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

## சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அடுப்பில்லா சமையல்

## அடுப்பில்லா சமையலில் எளிமையான, சத்தான மற்றும் கண்கவர் உணவுகளே மிகவும் பொருத்தமானவை - ஓர் அலசல்

நேற்றைய தொடர்ச்சி...

### அடுப்பில்லா சமையல் குறிப்புகள் சில என்னென்ன?

**செய்முறை 8: ஆரோக்கியமான பிளிஸ் பால்ஸ்**



இந்த வேர்க்கடலை வெண்ணெய் ஓட்ஸ் உருண்டைகள், குழந்தைகள் ஒரே நேரத்தில் செய்து சாப்பிடக் கூடிய ஒரு அருமையான செய் முறையாகும். பதப்படுத்தப்பட்ட பார்களைப் போலல்லாமல், இவை காலை மற்றும் மதிய வேளை களுக்கான ஆற்றல் தரும் சிற்றுண் டியாகச் சிறந்தவை. குழந்தைகள் இதன் மாவைத் தயாரிப்பதில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள விரும்பு வார்கள். இந்த ஆற்றல் உருண்டைகள், ஒரு சிறிய சிற்றுண்டியில் அதிக புரதச்சத்து, கொட்டைகளின் சுவை மற்றும் நற்குணங்களைக் கொண்டுள்ளன. மேலும், இது உங்கள் குழந்தைகளுக்கு வயிறு நிறைந்த மற்றும் முழுமையான திருப்தியை அளிக்கும்.

**தேவையான பொருட்கள்**

- ஓட் – 1 கப்
- துருவிய தேங்காய் – 1 கப் (மேல் பூச்சுக்காகக் கூடுதலாக எடுத்து வைக்கவும்)
- வேர்க்கடலை வெண்ணெய் – ⅔ கப்
- உங்களுக்கு விருப்பமான நறுக்கிய கொட்டைகள்– ½ கப்

● தேன்/மேப்பிள் சிரப் – ¼ கப்

● இலவங்கப்பட்டை – 1 தேக்கரண்டி

**எப்படித் தயாரிப்பது**

படி 1 : குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை ஒரு பிளெண்டரில் ஒன்றாகப் போட்டு ஒரு கலவையாக உருவாக்கவும்.

படி 2 : கலவையைப் பிசைந்து மாவாக்கவும். உங்கள் குழந்தைகள் விரும்பிய பதத்திற்கு, அதாவது மாவுப் பிண்டங் களை உருண்டைகளாக உருட்டக்கூடிய பதத்திற்கு வருவதற்கு, நீங்கள் சிறிதளவு தண்ணீர் சேர்க்கலாம்.

படி 3 : அந்தப் பகுதிகளைக் கைகளால் உருண்டைகளாக உருட்டி, பின்னர் அவற்றின் மீது தேங்காய்த் துருவலைப் பூசவும்.

படி 4 : எனர்ஜி பால்ஸை காற்றுப் புகாத ஒரு கொள்கலனில் சேமித்து வைக்கவும். பின்னர், அந்தக் கொள்கலனை குளிர் சாதனப் பெட்டியில் அல்லது அறை வெப்பநிலையில் வைக்கவும்.

படி 5 : இந்தச் சிறிய மகிழ்ச்சி உருண்டைகளை ஒரு ஆரோக்கியமான சிற்றுண்டியாக உண்டு மகிழுங்கள்.

**ஸ்செய்முறை 9 : புத்துணர்ச்சியூட்டும் புதினா + எலுமிச்சை ஸ்லஷி**



புழுக்கமான கோடையா? கவலையே வேண்டாம்!!! உங்கள் குழந்தைகளுக்குப் பழக்கூழ் (ஃப்ரூட் ஸ்லஷீ தயாரிப்ப தற்கான ஒரு வழியைக் கொடுங்கள். அவர்கள் வெவ்வேறு பழங்களையும் பெர்ரி களையும் கலந்து தங்கள் படைப் பாற்றலைக் காட்டலாம். மில்க்ஷேக்கு களைப் போலல்லாமல், இந்தப் பானம் புத்துணர்ச்சி யூட்டுவதாகவும், கெட்டியாகவும் இருப்பதுடன், இதைக் குடித்து முடிக்க அதிக நேரம் எடுக்கும்.

தேவையான பொருட்கள்

● எலுமிச்சை சாறு – 5-6 தேக்கரண்டி

● தேன் / மேப்பிள் சிரப் - ½ கப் (அல்லது வேறு ஏதேனும் இனிப்பூட்டி)

● புதிய புதினா இலைகள் - ¼ கப்

● குளிர்ந்த நீர் அல்லது சோடா நீர் – 2 கோப்பைகள்

● பனிக்கட்டி – 5 முதல் 6 கப்

**எப்படித் தயாரிப்பது**

படி 1 : மேலே உள்ள அனைத்துப் பொருட்களையும் ஒரு பிளெண்டரில் போட்டு, ஐஸ் சிறிய கூழ் போன்ற துண்டுகளாக உடையும் வரை கலக்கவும். விரும்பிய பதம் வரும் வரை தேவைப்பட்டால் குளிர்ந்த நீரை அல்லது ஐஸ் சேர்க்கவும்.

படி 2 : கண்ணாடிக் குவளைகள் அல்லது ஜாடிகளில் ஊற்றி, அதன் மேல் இரண்டு புதினா இலைகளையும் ஒரு உறிஞ்சு குழலையும் வைக்கவும்.

படி 3 : உங்கள் குழந்தைகளுடன் இந்த அருமையான சர்க்கரை இல்லாத கோடைக்கால பானத்தை அருந்துங்கள்.

# காரிமங்கலம் சந்தையில்

# ரூ.1.75 கோடிக்கு கால்நடைகள் விற்பனை

தர்மபுரி, ஏப்.22

தர்மபுரி மாவட்டம், காரிமங்கலம் வாரச்சந்தை செவ்வாய்க் கிழமை தோறும் நடந்து வருகிறது. இதில் சுற்று வட்டார பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கால்நடைகளை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். நேற்று நடந்த சந்தையில், சுமார் 800 ஆடுகள், 500 மாடுகளை கொண்டு வந்தனர். ரூ.90 லட்சத்திற்கு ஆடுகள் விற்பனை யானது. ரூ.82 லட்சத்திற்கு மாடுகள் மற்றும் ரூ.3 லட்சத்திற்கு நாட்டுக்கோழிகள் விற்பனையானது. நேற்றைய சந்தையில் சுமார் ரூ.1.75 கோடிக்கு கால்நடைகள் வர்த்தகம் நடந்தது. கடந்த வாரத்தை காட்டிலும், கால்நடை வரத்து மற்றும் விற்பனை குறைந்து காணப்பட்டதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

தலைக் கவசம் உயிர்க் கவசம்

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள் தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# உயிர்ச் செரிப்பான் [Biodigester] பயன்கள் – ஒரு பார்வை



விருதுநகர், ஏப்.22

காலநிலை மாற்றத்திற்கு தாங்கும் வறண்ட நில விவசாயம், சுற்றுச்சூழல் மற்றும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதில் இயற்கை முறை வேளாண்மை ஒரு சிறந்த வழியாகும். விவசாயத்தின் அடிப்படை வளமான மண், சுத்தமான நீர், தரமான விதைகள் இருந்தால் விவசாயமும், விவசாயிகளின் வாழ்வாதாரமும் மேம்படும்.

விவசாய கழிவுகள், மாட்டுச்சாணம், கோமியம், வெல்லக் கரைசல் இவைகளை கலந்து ஒரு வாரம் வரை நொதிக்க வைப்பது தான் பயோடைஜஸ்டர் ஆகும். நீர் பாய்ச்சும் போது இந்த பயோடைஜஸ்டர் கரைசலை நீருடன் சேர்த்து பாய்ச்சினால் பயிர்களும், விளைச்சலும், மண் வளமும் கூடுகிறது.

குஜராத் மாநிலத்தில் இந்த பயோடைஜஸ்டர் என்ற இயற்கை வேளாண்மை முறை அதிகப்படியான விவசாயிகளால் பின்பற்றபட்டு வெற்றிகரமாக விவசாயத்தை மேம்படுத்தி வருகிறார்கள்.

இதே முறையை பின்பற்றி விடியல் - KVB - CSR சுற்றுச்சூழல் மற்றும் வாழ்வாதார பாதுகாப்பிற்கான காலநிலை மாற்றத்திற்கேற்ப தரிசு நில மேம்பாட்டு திட்டத்தின் கீழ் விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், கட்டங்குடி பஞ்சாயத்தில் உள்ள V.ஜீவரத்தினம் என்ற விவசாயி சிறப்பாக செயல்படுத்தி வருவதை கட்டங்குடி மற்றும் செம்பட்டி பஞ்சாயத்தில்மற்ற விவசாயிகளுக்கும் ஒரு பயிற்சியாக வழங்கப்பட்டது.

பயிற்சியில் கலந்துக் கொண்டவர்களை K.வினோபாலாஜி, விடியல் அறக்கட்டளை நிறுவனர் வரவேற்றார். M.சீதாலஷ்மி, திட்ட மேற்பார்வையாளர், விடியல் அறக்கட்டளை, பயிற்சியில் கலந்துக் கொண்டவர்களுக்கு நன்றி கூறினார்.

# விதைப்பரிசோதனை செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு

விதை உற்பத்தியாளர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும், விவசாய பெருமக்களுக்கும் விதையின் உண்மையான தரத்தை உறுதி செய்யும் நோக்கத்துடன் விதை பரிசோதனை செய்யப்படுகிறது. ஒரு விதை குவியலின் புறத்தூய்மை, முளைப்புத்திறன், பிறஇரக கலப்பு, ஈரப்பதம் ஆகியவற்றை உறுதி செய்யும் விதமாக விதைப்பரிசோதனை மேற்கொள்ளப் படுகிறது.

## புறத்தூய்மை பரிசோதனை

பயிர் அறுவடை முடிந்து, கதிரடித்து, பிரிக்கப்பட்டு எடுக்கப்படும் விதைக்குவியல்களிலிருந்து கிடைக்கும் விதைகள் உடனடியாக விதைப்பதற்கோ நடவு செய்வதற்கோ தகுதியானதாக இருக் காது. அந்த விதைகளுடன் மண், சிறு கற்கள், இலைகளின் துகள்கள், குச்சி மற்றும் பொக்கு விதைகள் கலந்து இருக்கும். எனவே அறுவடை முடிந்து பிரித்தெடுக்கப்படும் விதைகள் சுத்தமாகவும் பிற பொருட்கள் கலப்பு இன்றி இருக்கவும் சுத்தி செய்யப்பட வேண்டும். புறத்தூய்மை பரிசோதனை இதனை உறுதி செய்ய மேற்கொள்ளப்படுகிறது. புறத்தூய்மை பரிசோதனையின் போது தூய விதைகளுடன் களை விதைகள், பிற பயிர் விதைகள் மற்றும் பிற பொருட்கள் கலந்துள்ளனவா எனக் கண்டறியப்படுகிறது.

## முளைப்புத்திறன் பரிசோதனை

முளைப்புத்திறன் என்பது விதையானது உயிரும் வீரியமும் கொண்டு, கருமுளை விட்டு பின்னர் வளர்ச்சிக்கு அத்தியாவசிய மான பாகங்கள் உருவாகி இயல்பான செடியாவதற்குறிய திறனே ஆகும். முளைப்புத்திறன் பரிசோதனை தூய விதை களில் இருந்து மேற்கொள்ள வேண்டும்.

முளைப்புத்திறன் பரிசோதனை மேற்கொள்ள மணல், முளைப்பு தாள்கள் மற்றும் வடிதாள்கள் பயன்படுத்தப்படு கின்றது. குறைந்தபட்சம் 400 விதைகளில் முளைப்புத்திறன் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. முளைப்புத்திறன் பரிசோதனை யின் போது நாற்றுகளை இயல்பானது, இயல்பற்றது எனவும்,

முளைக்காத விதைகளை உயிரற்றது, கடினமானது & உயிருள்ள முளைக்காத விதைகள் எனவும் வகைபடுத்தி முடிவுகள் அறிவிக்கப்படுகின்றன.

**பிற இரக கலப்பு பரிசோதனை**

விதை மாதிரிகளில் பிறஇரக விதைகள் கலந்துள்ளனவா என்பதை நுண்ணோக்கி மூலம் கண்காணித்து இரகத்தின் குணநலன்களைக் கருத்தில் கொண்டு பிரித்தரியப்படுகிறது. வேளாண்மை பல்கலைக்கழகங்களிலிருந்து பெறப்படும் வல்லுநர் விதைகளை ஒப்பீட்டு மாதிரிகளாக கொண்டு பிற ரக கலப்பு பரிசோதனை செய்யப்படுகிறது.

**ஈரப்பதம் பரிசோதனை**

விதையின் ஈரப்பதம் குறைவாகவோ அல்லது அதிகமாகவோ இருக்கக்கூடாது. சரியான ஈரப்பத நிலையில் உள்ள விதைகள் பூச்சி மற்றும் பூஞ்சான தாக்குதல் இன்றி சேமித்து வைக்க கூடிய நிலையில் இருக்கும். ஒவ்வொரு குறிப்பிட்ட பயிரின் விதைக்கும் சரியான ஈரப்பதம் உள்ளதா என ஈரப்பதம் கண்டறியும் கருவியை கொண்டு ஈரப்பத பரிசோதனை மேற்கொள்ளப் படுகிறது. விவசாயிகள், விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்கள் அனைவரும் தங்களிடமிருக்கும் விதைகள் தரமானதா என்பதை அறிய விதை பரிசோதனை செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

விதை பரிசோதனை செய்ய விதை மாதிரியுடன், விதை பரிசோதனை கட்டணம் ரூ.80 செலுத்த வேண்டும். விதை மாதிரியுடன் பயிர், ரகம், குவியல் எண் மற்றும் தேவைப்படும் பரிசோதனை, அனுப்புநர் பெயர், முகவரி & தொடர்பு எண்ணுடன் தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ விதை மாதிரியினை கொடுத்து பயன்பெறுமாறு திருநெல்வேலி விதைப் பரிசோதனை அலுவலர் ஞா.ஆனந்தி ராதிகா கேட்டுக் கொள்கிறார்.

விதை மாதரி அனுப்ப வேண்டிய முகவரி : விதைப் பரிசோதனை ஆய்வகம், நிருபர் காலனி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி - 627 002.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# கோடையில் வருமானம் அள்ளி கொடுக்கும் ‘சீனி அவரை‘ சாகுபடி

விருதுநகர், தூத்துக்குடி மாவட்டங்களில் ஓரளவு நீர் வசதியுள்ள இடங்களில் இந்த கோடை காலத்தில் (ஏப்ரல், மே, ஜுன், ஜுலை) மாதங்களில் சீனி அவரை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.





காயாக பறிக்காமல் அப்படியே காய்களை நெற்றுகளாக முற்ற விட்டு (விதைகளை) தனியாக பிரித்து எடுக்கப்படுகிறது. காய்களின் தோல் பொட்டாக தனியாக எடுத்து ஆடுகளுக்கு சிறந்த தீவனமாக பயன்படுத்தப்படுகிறது.

தற்போது ஒரு குவிண்டால் விதை 11 ஆயிரம் முதல் 14 ஆயிரம் வரை விற்பனை செய்யப்படுவதால் பலர் இதனை அதிகளவில் சாகுபடி செய்கின்றனர். ஒரு சில இடங்களில் ஒப்பந்த சாகுபடி (CONTRACT FARMING) ஒரு சில தனியார் நிறுவனங்கள் மூலமாக கொள்முதல் செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.

**சாகுபடி முறை**

கொத்தவரை இதனை ஆங்கிலத்தில் (CLUSTER BEANS) என்றும் GUAR என்றும் அழைக்கப்படுகின்றன. இதனுடைய அறிவியல் பெயர் (CYAMOPSIS TETRA GONO LOBA) குறைந்த முதலீட்டில் எளிதாக சாகுபடி செய்யலாம். பச்சை பச்சேல் எனக் காட்சியளிக்கும் சீனி அவரைக்காய் சாகுபடி முறைகள் பற்றி பார்ப்போம்.

**ரகங்கள்**

பூசா நவ்பகார், பூசா சதத் பவர், பூசா மத சாமி, கோமா, மஞ்சரி உள்ளிட்ட பல ரகங்கள் உள்ளன.

**நிலத் தயாரிப்பு**

நல்ல வடிகால் வசதியுடைய அனைத்து மண்வகைகளிலும் வளரும். மண்ணின் கார அமில நிலை 7.5 முதல் 8.5 வரை.

**உரம்**

ஏக்கருக்கு 5 டன் மக்கிய தொழுஉரமிட வேண்டும். அத்துடன் தழை, மணி, சாம்பல் சத்துகள் 20:20:10 (NPK RATIO) என்ற அளவில் இடவேண்டும்.



**விதைப்பு**

ஏக்கருக்கு 4-6 கிலோ விதை நேர்த்தி செய்து 45 செ.மீ இடைவெளியில் விதைகளை ஊன்ற வேண்டும். நடவு செய்து முளைத்த பின் 20-25வது நாளில் களை எடுக்க வேண்டும். களை எடுப்பது செடி நன்றாக படர்ந்து வளரும். தேவைபட்டால் தழை சத்தை பயன்படுத்தலாம்.

**பயிர் பாதுகாப்பு**

சீனி அவரையில் அவ்வளவாக பூச்சி/நோய் தாக்குதல் கிடையாது. இலைப்பேன், சாம்பல் நோய் தாக்குதல் வரலாம். அதற்கேற்ப பயிர் பாதுகாப்பு செய்யலாம்.

**அறுவடை**

விதைத்த 90வது நாளில் செடிகளிலிருந்து காய்களை பறிக்கலாம். அல்லது செடியை வேருடன் பிடிங்கி விதைகளை தனியாக பிரிக்கலாம்.

விதைகள் உருவாகும் போது மழை பெய்யக்கூடாது. பெய் தால் விதைகள் பாதிக்கும். விதைகளிலிருந்து பசை (GUAR GUM) தயாரிக்கபடுகிறது.

**மகசூல்**

3-4 டன்/ ஏக்கர்.

**கொத்தவரங்காய் பயன்கள்**

1) கிளைகோ நீயூட்ரியண்ட் (GLOCONUTRINT) என்னும் வேதிப் பொருள் அதிகமாக உள்ளதால் சர்க்கரை கட்டுப்படுத்த கூடிய காய்களில் இதுவும் முக்கியமானது.

2) மிக குறைந்த கலோரி உணவாக இருப்பதால் எடையை குறைக்க விரும்பும் நபர்கள் உணவில் சேர்த்துக்கொள்ளலாம்.

3) கர்ப்பிணிகளுக்கு ஏற்ற உணவு

4) குறைந்த விலையில் (மற்ற காய்கறி விலையை ஒப்பிடும் போது) கிடைக்க கூடிய சத்தான காய்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# தென்னையில் போரான் குறைபாடு? எருக்கு இலை தீர்வு!




தமிழ்நாட்டில் தேங்காய் ஒரு முக்கியமான நிரந்தர வருமானப் பயிராக விளங்குகிறது. பல ஆயிரக்கணக்கான விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் இந்தப் பயிர் நல்ல பராமரிப்பு மற்றும் சரியான ஊட்டச்சத்து மேலாண்மை பெற்றால் மட்டுமே அதிக மகசூலை வழங்கும்.

பொதுவாக விவசாயிகள் நைட்ரஜன், பாஸ்பரஸ் மற்றும் பொட்டாசியம் போன்ற முக்கிய ஊட்டச்சத்துகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதுண்டு. ஆனால் மிகச் சிறிய அளவில் தேவைப்படும் சிறுநுண் ஊட்டச்சத்துகள் (Micronutrients) கூட தாவர வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கின்றன. அவற்றில் முக்கியமான ஒன்று போரான் (Boron) ஆகும்.

போரான் தாவரங்களில் செல் சுவர் உருவாக்கம், புதிய திசுக்கள் வளர்ச்சி, மலர்ச்சி மற்றும் காய்திறன் போன்ற முக்கிய செயல்பாடுகளில் பங்கு வகிக்கிறது. மண்ணில் போரான் அளவு குறைந்தால் தென்னை மரத்தின் வளர்ச்சி பாதிக்கப்பட்டு மகசூல் குறையும். எனவே போரான் குறைபாட்டை ஆரம்ப கட்டத்திலேயே கண்டறிந்து சரியான முறையில் கட்டுப்படுத்துவது மிகவும் அவசியமாகிறது.

### போரான் குறைபாட்டின் அறிகுறிகள்

- இளம் இலைகள் சுருங்கி மடங்கிய வடிவத்தில் காணப்படும்.
- இலைத் தண்டுகளின் முனைகள் கூர்மையாக வளைந்து காணப்படும். இது பொதுவாக "ஹூக் லீஃப்" (Hook leaf) என்று அழைக்கப்படுகிறது.

● இலைகள் சுருண்டு மற்றும் சுருக்கம் ஏற்பட்டதுபோல் தோன்றும்.

● மலர் தொகுப்புகள் (Inflorescence) சரியாக உருவாகாது.

● காய்கள் உருவாகும்போது நெக்ரோசிஸ் (Necrosis) போன்ற உலர்ச்சி அறிகுறிகள் தோன்றலாம்.

● சிறிய காய்கள் வளராமல் உதிர்ந்து விடும்.

● சில நேரங்களில் காய்களின் வடிவம் சீரற்றதாக இருக்கும்.

இந்த அறிகுறிகள் நீண்ட காலம் தொடர்ந்தால் தேங்காய் மரத்தின் உற்பத்தித் திறன் கணிசமாக குறையும்.

**எருக்கு – இயற்கையான தீர்வு**

போரான் குறைபாட்டை சரி செய்ய பொதுவாக போரக்ஸ் போன்ற இரசாயன உரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் சில நேரங்களில் இயற்கையான முறைகள் அதிக பயனளிக்கக்கூடும். தமிழகத்தின் பல பகுதிகளில் இயற்கையாக வளரும் ஒரு பொதுவான செடி எருக்கு ஆகும்.

எருக்கு செடியை பச்சை இலை உரமாக பயன்படுத்துவது போரான் குறைபாட்டை கட்டுப்படுத்த உதவும் ஒரு பயனுள்ள முறையாக கருதப்படுகிறது.

எருக்கு இலைகள் மற்றும் தண்டுகள் மண்ணில் புதைக்கப்பட்ட பின் அவை மெதுவாக அழுகி கரிமப்பொருளாக மாறுகின்றன. இந்தச் செயல்முறையின் போது

● மண்ணுக்கு தேவையான கரிம கார்பன் கிடைக்கிறது

● மண்ணில் இருக்கும் போரான் அளவு மீண்டும் நிரப்பப் படுகிறது

● மண்ணின் வளமும் உயிரியல் செயல்பாடுகளும் மேம் படுகின்றன

இதனால் தேங்காய் மரங்களுக்கு தேவையான ஊட்டச் சத்துகள் கிடைத்து போரான் குறைபாடு குறைகிறது.

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்

## எருக்கு இலைகளை பயன்படுத்தும் முறை

1. ஆரோக்கியமான எருக்கு செடிகளில் இருந்து பச்சை இலைகளை சேகரிக்க வேண்டும்.

2. தேங்காய் மரத்தின் சுற்றிலும் சுமார் 1.5–2 மீட்டர் தூரத்தில் ஒரு வளையமாக பள்ளம் தோண்ட வேண்டும்.

3. அந்த பள்ளத்தில் 5–10 கிலோ எருக்கு இலைகளை போட வேண்டும்.

4. அதன் மேல் மண்ணை மூடி சிறிது நீர் ஊற்ற வேண்டும்.

சில வாரங்களில் இலைகள் அழுகி மண்ணில் கரிமப் பொருளாக மாறி ஊட்டச்சத்துகளை வெளியிடும்.

## இந்த முறையின் முக்கிய நன்மைகள்

- குறைந்த செலவில் கிடைக்கும் இயற்கை வளம்
- மண்ணின் கரிமப்பொருள் அளவை அதிகரிக்கிறது
- சுற்றுச்சூழலுக்கு பாதுகாப்பான முறையாகும்
- நீண்ட காலத்திற்கு மண்ணின் வளத்தை நிலைநிறுத்த உதவுகிறது
- இரசாயன உரங்களின் பயன்பாட்டை குறைக்க உதவுகிறது.

## முடிவுரை

சிறுநுண் ஊட்டச்சத்து குறைபாடுகள் விவசாய உற்பத்தியில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவை. குறிப்பாக தென்னை மரங்களில் போரான் குறைபாடு ஏற்பட்டால் வளர்ச்சியும் மகசூலும் பாதிக்கப்படும்.

எனவே விவசாயிகள் இயற்கை வளங்களை பயன்படுத்தி மண்ணின் ஊட்டச்சத்து மேலாண்மையை மேம்படுத்தினால், குறைந்த செலவில் நல்ல மகசூலை பெற முடியும். இது நிலைத்திருக்கும் விவசாயத்திற்கு ஒரு சிறந்த வழிமுறையாகவும் அமையும்.

தகவல் : ***குளோரி.கே.எஸ், சி.பிரசாத், உதவி பேராசிரியர்கள் (மண் அறிவியல் மற்றும் வேளாண் வேதியியல் துறை) கிருஷ்ணா வேளாண்மை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி, உசிலம்பட்டி.***


ஜெயின்
நாற்றுகள்
சிறந்த மகசூல் - அதிக லாபம்
Jain Seedlings
PAPAYA
பப்பாளி
Rs. 16/-
ஒரு நாற்றின் விலை
போக்குவரத்து கட்டணம்
கூடுதலாக.(உடுமலையிலிருந்து)
ரெட் லேடி
தைவான் 786
முன்பதிவு
செய்வதற்கு
இன்றே அழையுங்கள்:
94425 02396

# வரும் ஐந்து நாட்களுக்கான சேலம் மாவட்ட வானிலை முன்னறிவிப்பு

சேலம், ஏப்.23

சேலம் மாவட்டம், மாவட்ட வேளாண் வானிலை மையம், சந்தியூர், வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர், இரா.விஜயன், மா.இரவி, பெ.கோகிலா மற்றும் செ.பிரபாகரன் ஆகியோர் கூறியதாவது, அடுத்த ஐந்து நாட்களுக்கான சேலம் மாவட்ட வானிலையில், வானம் பெரும்பாலும் லேசான மேக மூட்டத்துடன் காணப்படும் மற்றும் மாவட்டத்தின் ஒரு சில பகுதிகளில் 24.04.2026 அன்று லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. பகல் வெப்பம் 39.0° ØÄ.(102.2° பா)-க்குமிகாமலும், இரவு வெப்பம் 27.0° ØÄ.(80.6° பா) யாகவும் காணப்படும். காற்றின் திசை பெரும்பாலும் தெற்கு மற்றும் தென் கிழக்கு திசையிலிருந்து வீசும். அதன் வேகம் மணிக்கு 4–10கி. மீ என்றளவில் இருக்கும். காற்றின் ஈரப்பதம் 30–75% மாக நிலவும்.

ஸ வெயிலின் தாக்கம் அதிகமாக இருப்பதால், முட்டையிடும் கோழிகளில் வெப்ப அயற்சி காரணமாக தீவன எடுப்பு குறையும். மேலும் வெப்ப அதிர்ச்சி காரணமாக கோழிகள் இறக்கவும் நேரிடும்.

● கோடை காலத்தை சமாளிக்கவும், வெப்ப தாக்கத்திலிருந்து கோழிகளை பாதுகாக்கவும் பகல் வேளையில் மதியம் 1 மணி முதல் மாலை 5 மணி வரை தீவனம் அளிக்கக்கூடாது.

● கோடைகாலத்தில் கோழிகளுக்கு நாள் முழுவதும் குளிர்ச்சியான குடிநீர் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.

● கோழி தீவனத்தில் சோயா எண்ணையை சேர்ப்பதன் மூலம் வெப்ப அயர்ச்சியை ஓரளவு குறைக்கலாம்.

● தீவனத்தில் தேவையான அளவு எலக்ட்ரோலைட்ஸ் மற்றும் உயிர்சத்துக்கள் சேர்ப்பதன் மூலம் வெப்ப அயர்ச்சியின் தாக்கம் மற்றும் உற்பத்தி குறைவினை தவிர்க்கலாம்.

● கோடை காலத்தில் கோழிப்பண்ணைகளில் இரவு நேரத்தில் ஒரு மணி நேரம் (12–1 மணி) விளக்குகளை எரிய விடுவதன் மூலம் தினமும் கோழிகள் உட்கொள்ளும் அடர் தீவனத்தின்

அளவினை அதிகரிக்கலாம். வெப்பம் அதிகமாக இருக்கும் மதிய வேளையில் தண்ணீர் தெளிப்பான்களை பயன்படுத்தி வெப்பத்தின் தாக்கத்தினை குறைக்கலாம்.

● தற்போது கோடைக்காலம் துவங்கியுள்ளதால், வரும் நாட் களில் வெப்பநிலை உயர்வின் காரணமாக காய்கறிப் பயிர்களில் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் தாக்குதல் அதிகமாக இருக்கக் கூடும். இதனால் மகசூல் இழப்பு ஏற்பட நிறைய வாய்ப்புள்ளது.

எனவே இதன் பாதிப்பைக் கட்டுப்படுத்த, மஞ்சள் வண்ண ஒட்டும் பொறியை ஒரு ஏக்கருக்கு 5 என்ற எண்ணிக்கையில் வைத்து அவற்றைக் கண்காணிக்க வேண்டும். மேலும் வேப்ப எண்ணெய் மற்றும் புங்கம் எண்ணெய் ஆகியவை தலா 15 மி.லி/லிட்டர் மற்றும் காதி சோப்பு திரவம் 20 மி.லி வீதம் கலந்து இலைவழி தெளிப்பாக தெளித்து கட்டுப்படுத்தலாம்.

● வறட்சிக் காலத்தில் பழ வகை மரங்களைக் காப்பாற்ற சில உத்திகளைக் கையாள்வது முக்கியம். தென்னை நார், கரும்புச் சக்கை மற்றும் பயிர் கழிவுகளை ஆகியவற்றைப் பயன்படுத்தி மண்ணில் நிலப்போர்வை ஈரப்பதத்தை 15 நாட்கள் வரை தக்க வைக்கலாம்.

**கோடை உழவு :** கோடை மழையை பயன்படுத்தி நிலத்தை உழுது மழை நீரை சேமித்து வைக்கலாம்.

இதனை திட்ட ஒருங்கிணைப்பாளர், வேளாண்மை அறிவியல் நிலையம், சந்தியூர், சேலம் - 636 203 தெரிவித்தனர்.



# விதை நலம் வேளாண்மையின் நலம்

வேளாண்மை தொழிலில் மிக முக்கியமான இடுபொருள்கள் விதை, நீர், உரம் இம்மூன்றிலும் விதையானது உயிருள்ள இருபொருள். தரமான விதைகளே நல்விளைச்சல் தர வல்லவை. தரமான விதைகள் விவசாயிகளுக்கு கிடைத்திட விதைச்சான்று மற்றும் உயிர்மச்சான்று துறையினரால் பல முக்கிமான நிலைகளில் அதாவது, வயல்மட்டத்தில் வளரும் பருவம், பூக்கும் பருவம், காய் முதிர்ச்சி பருவம், அறுவடை செய்து விதை சுத்தீகரிப்பு நிலையங்களில் கொள்கலனிடும் தருணம், சான்று அட்டை பொருத்தும் பொழுதும் மற்றும் விதை விற்பனை பகிர்வாளர், விநியோகஸ்தர் மற்றும் சிறுவியாபாரம் செய்யும் இடங்களிலும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு விதை மாதிரிகள் விதைச்சான்று அலுவலர்கள், விதைச்சான்று உதவி இயக்குநர் மற்றும் விதை ஆய்வாளர்களால் விதை மாதிரிகள் சேகரிக்கப்பட்டு விதையின் தரத்தினை அறிய அரசு விதை பரிசோதனை நிலையங்களுக்கு அனுப்பப்படுகிறது.

விதைகளின் தரத்தை உறுதி செய்வதில் விதைப்பரிசோதனை நிலையங்கள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. கடந்த நிதியாண்டில், 2025-2026 திருப்பூர் விதைப்பரிசோதனை நிலையத்தில் மட்டும் 8968 எண்கள் விதைமாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு, அதில் 298 எண்கள் தரக்குறைவு மாதிரிகள் கண்டறியப்பட்டு பகுப்பாய்வு முடிவுகள் அறிவிக்கப் பட்டுள்ளது.

விதை உற்பத்தியாளர்கள் மற்றும் விவசாயிகள் தங்களது விதைக்குவியல்களிலிருந்து சுமார் 250 கிராம் விதை மாதிரி எடுத்து விதைப்பரிசோதனை நிலையத்தில் கொடுத்து தங்களது விதைகளின் தரத்தை உறுதி செய்து கொள்ளலாம்.



தரமான விதைகள் பின்வரும் சதவீதங்களில் முளைப்புத் திறன், ஈரப்பதம் மற்றும் புறத்தூய்மையுடன் இருத்தல் வேண்டும்.

| பயிர் | புறத்தூய்மை | முளைப்புதிறன் | ஈரப்பதம் |
|---|---|---|---|
| நெல் | 98 | 80 | 13 |
| சோளம் | 98 | 75 | 12 |
| கம்பு | 98 | 75 | 12 |
| மக்காச்சோளம் | 98 | 90 | 12 |
| துவரை | 98 | 75 | 9 |
| உளுந்து | 98 | 75 | 9 |
| பயிறுவகைகள் | 98 | 75 | 9 |
| நிலக்கடலை | 96 | 70 | 9 |
| எள் | 97 | 80 | 9 |
| சூரியகாந்தி | 98 | 70 | 9 |
| பருத்தி | 98 | 75 | 10 |

விதைப்பரிசோதனை நிலையங்கள் மிக குறைந்த கட்டணமாக ஒரு மாதிரிக்கு ரூ.80/- என்ற அடிப்படையில் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தங்களது விதைகளின் தரம் குறித்த முடிவினை குறைந்த பட்சமாக 5 நாட்களில் இருந்து அதிகபட்சமாக 30 நாட்களுக்குள் பெற்று கொள்ளலாம்.

இதனை திருப்பூர் விதைப்பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர்கள் சி.வசந்தி மற்றும் ஜோ.மோ.அறிவுமதி தெரிவித்து உள்ளனர்.



# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்றுபெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**